## இஸ்லாமியக் கலாச்சாரத்தின் சிறப்பம்சங்கள் மற்றும் பிரதிபலிப்புகள்

*இஸ்லாமியக் கலாச்சாரம் சிறப்புடன் விளங்குவதற்கான சில அடிப்படைகளும் விதிமுறைகளும் உள்ளன, மற்றும் அது மற்றக் கலாச்சாரங்களுக்கிடையே தனித்தன்மையும் தனிச்சிறப்பும் பெற்றுவிளங்குவதற்கான அமசங்களும் உள்ளன. அவற்றுள் முக்கியமானவை கீழ்வருமாறு:*

### 1 கொள்கைகள் (அ:கீதா)

*இஸ்லாம் ஏகத்துவத்தின் கொள்கையின்பால் அழைக்கின்றது, அதன் அடிப்படையில் கீழ்ப்படிவதும், வணக்க வழிபாடும் அல்லாஹ் ஒருவனுக்கே உரியதாகும். இஸ்லாம் இந்த ஏகத்துவத்தின் கொள்கையினை அதன் அனைத்து அம்சங்களின் அடிப்படையில் தெள்ளத்தெளிவாக ஆதாரங்களுடன் எடுத்துரைத்துள்ளது. அத்துடன் நின்றுவிடாமல், மாற்றுச் சிந்தனைகள், கோட்பாடுகள் மற்றும் கொள்கைகள் அனைத்துமே தவறானவை என்பதையும் நிலைநாட்டியுள்ளது. இதனைப் பற்றி அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:*

قُلْ هُوَ ٱللَّهُ أَحَدٌ ﴿١﴾ ٱللَّهُ ٱلصَّمَدُ ﴿٢﴾ لَمْ يَلِدْ وَلَمْ يُولَدْ ﴿٣﴾ وَلَمْ يَكُن لَّهُۥ كُفُوًا أَحَدٌۢ ﴿٤﴾

*பொருள்: கூறுவீராக, அவன் அல்லாஹ், ஏகன், அல்லாஹ் (எவரிடத்தும்) எத்தேவையுமில்லாதவன் (அனைவரும் அவனிடத்தில் தேவையுள்ளவர்களே), அவன் யாருடைய சந்ததியும் இல்லை, அவனுக்கு யாரும் சந்ததியும் இல்லை, மேலும், அவனுக்கு நிகரானவர் எவருமே இல்லை. (அல் இஃக்லாஸ்:1-4)*

*இவ்வகையில், இஸ்லாம் அல்லாஹ் தஆலாவின் ஏகத்துவத்தைப் பற்றிய அனைத்து வகையிலான விவாதங்களையும் முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது. இவ்வாறே, இஸ்லாம் யூதர்கள் மற்றும் கிறித்துவர்களுடைய தவறான நம்பிக்கைகளையும் ஆதாரங்களுடன் நிராகரித்துவிட்டது. ஆகவேதான், அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:*

وَقَالَتِ ٱلْيَهُودُ عُزَيْرٌ ٱبْنُ ٱللَّهِ وَقَالَتِ ٱلنَّصَـٰرَى ٱلْمَسِيحُ ٱبْنُ ٱللَّهِ ۖ ذَٰلِكَ قَوْلُهُم
بِأَفْوَٰهِهِمْ ۖ يُضَـٰهِـُٔونَ قَوْلَ ٱلَّذِينَ كَفَرُوا۟ مِن قَبْلُ ۚ قَـٰتَلَهُمُ ٱللَّهُ ۚ أَنَّىٰ يُؤْفَكُونَ

﴿٣٠﴾ ٱتَّخَذُوٓاْ أَحۡبَارَهُمۡ وَرُهۡبَٰنَهُمۡ أَرۡبَابٗا مِّن دُونِ ٱللَّهِ وَٱلۡمَسِيحَ ٱبۡنَ مَرۡيَمَ
وَمَآ أُمِرُوٓاْ إِلَّا لِيَعۡبُدُوٓاْ إِلَٰهٗا وَٰحِدٗاۖ لَّآ إِلَٰهَ إِلَّا هُوَۚ سُبۡحَٰنَهُۥ عَمَّا
يُشۡرِكُونَ ﴿٣١﴾

*பொருள்: உஜ்ஸைர் அல்லாஹ்வின் புதல்வர் என்று யூதர்கள் கூறுகின்றார்கள், மசீஹ் அல்லாஹ்வின் புதல்வர் என்று கிறித்துவர்கள் கூறுகின்றார்கள், அவர்கள் தங்களுடைய நாவினால் கூறும் (உண்மைக்குப் புறம்பான) கூற்றுகளாகும் இவை. இவர்களுக்கு முன்னர் இறை நிராகரிப்பை மேற்கொண்டிருந்தவர்கள் கூறியதைப்போல் இவர்களும் கூறுகின்றனர். அல்லாஹ் இவர்களை நாசப்படுத்துவானாக. அவர்கள் எவ்வாறு திசை திருப்பப்படுகின்றார்கள். அவர்கள் அல்லாஹ்வை விடுத்து மார்க்க மேதைகளையும், துறவிகளையும் தங்களின் ரப்புகளாக (கடவுளாக) ஆக்கிக்கொண்டார்கள், மேலும், இதுபோன்று மர்யத்தின் குமாரர் மசீஹையும் (இறைவனாக்கிக் கொண்டனர்). உண்மை யாதெனில், ஒரே இறைவனைத்தவிர வேறெவரையும் வணங்க அவர்களுக்குக் கட்டளையிடப்பட்டதில்லை, வணக்கத்திற்குரிய இறைவன் அவனையன்றி யாருமில்லை, அவர்கள் செய்யும் இணைவைப்புச் செயல்களிலிருந்து அவன் தூய்மையானவன் (அத்தவ்பஹ்:30,31).*

*இஸ்லாம் ஆதாரங்களின் அடிப்படையில் அல்லாஹ்வைத்தவிர மற்ற கடவுள்களை வணக்கத்திற்குரியவர்களாக ஆக்கிக்கொண்டிருந்த மக்கள் அனைவரின் வாதங்களையும் நிராகரித்துவிட்டது. அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:*

أَمِ ٱتَّخَذُوٓاْ ءَالِهَةٗ مِّنَ ٱلۡأَرۡضِ هُمۡ يُنشِرُونَ ﴿٢١﴾ لَوۡ كَانَ فِيهِمَآ ءَالِهَةٌ إِلَّا ٱللَّهُ لَفَسَدَتَاۚ فَسُبۡحَٰنَ
ٱللَّهِ رَبِّ ٱلۡعَرۡشِ عَمَّا يَصِفُونَ ﴿٢٢﴾

*பொருள்: இவர்கள் உருவாக்கிய பூலோக தெய்வங்கள் (உயிரில்லாதவற்றிற்கு உயிர் கொடுத்து) எழுப்பிக்கொண்டுவரக்கூடியவையா, என்ன? வானத்திலும் பூமியிலும் அல்லாஹ் ஒருவனைத்தவிர மற்ற கடவுளர்களும் இருந்திருந்தால், அவ்விரண்டின் ஒழுங்கமைப்பும் சீர்குலைந்துபோயிருக்கும். எனவே, அவர்களின் பொய்யான வர்ணனையிலிருந்து அர்ஷுக்கு உரியவனான அல்லாஹ் மிகப் புனிதமானவன் (அல் அன்பியா:21,22)*

www.uzairfalahi.com

இஸ்லாம் ஒரு முழுமையான பூரணமான மார்க்கமாகும். இதன் பூரணமான தனித்தன்மை அதனுடைய கலாச்சாத்தின் மூலம் எல்லா வகையிலும் காணக்கிடைக்கின்றது. மனித வாழ்க்கையின் அனைத்துக் கோணங்களும் - பொருளாதார, அரசியல், சமூக மற்றும் சிந்தனை ஆகிய அனைத்துறைகளிலும் அதன் ஆழமான பதிவுகளைக் காண லாம் - இவ்வகையில், இஸ்லாம் மனிதர்களுடைய ஆன்ம ரீதியான, அறிவாற்றல் மற்றும் மனித உடல் சார்ந்த அனைத்துத் தேவைகளை யும் ஒருங்கே பூர்த்தி செய்யும் வகையில் அமைந்துள்ளது. இஸ்லா மியக் கலாச்சாரம் இந்தப் பூமியில் வாழ்பவர்களுடைய அனைத்துத் தேவைகள், மறுமைநாள் வரையிலான தேவைகள் மற்றும் அனைத் துப் பிரச்சினைகளுக்கான ஒரு தீர்வாக உள்ளது. ஏனெனில், இது திருக்ஃகுர்ஆன் வகுத்துத்தந்துள்ள கலாச்சாரப் பண்பாகும், அதனை இறுதிநாள் வரையிலும் பாதுகாக்கும் பொறுப்பினை அல்லாஹ்வே ஏற்றுக்கொண்டுள்ளதாக வாக்களித்துள்ளான். இது பாறையைப் போன்ற ஒரு கடினமான கலாச்சாரம் அல்ல, மாறாக, இது மனித வாழ்க்கையின் கட்டமைப்பு மற்றும் வளர்ச்சிக்கு உறுதுணையான, அனைத்துச் சிந்தனைகள் மற்றும் அனைத்து ஆதாரங்களையும் உள்ள டக்கியதாக உள்ளது. ஆகவே, இஸ்லாமியக் காலாச்சாரத்தில் தனக்கே உரிய கொள்கைகள் மற்றும் அடிப்படைகள் அனைத்துமே உள்ளன. ஒவ்வொரு காலம் மற்றும் நாட்டிலும் மக்களுக்குப் பயனுள்ள, அவர் களுக்குப் பொருத்தமான சட்டங்களை அமல் படுத்துவதற்கான சாத னங்களும் சாத்தியமும் உள்ளது என்பது நிரூபிக்கப்பட்டுவிடுகிறது.

## 2 கல்விக்கான சிறப்பு ஏற்பாடு

இஸ்லாமியக் காலாச்சாரத்தில் கல்விக்கு தனிச்சிறப்பும் முக்கியத்துவ மும் அளிக்கப்பட்டுள்ளது. திருக்ஃகுர்ஆன் மற்றும் நபிமொழிகளில் கல்வி கற்பது ஊக்குவிக்கப்பட்டும் வலியுறுத்தப்பட்டும் உள்ளது, இவ்வகையில், இஸ்லாம் கல்வி கற்பவர்கள் மற்றும் கல்வியில் பின் தங்கியவர்கள் மற்றும் கல்வியறிவற்றவர்களுக்கிடையே வித்தியாசத் தைக் காண்கின்றது, அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:

قُلْ هَلْ يَسْتَوِى ٱلَّذِينَ يَعْلَمُونَ وَٱلَّذِينَ لَا يَعْلَمُونَ ۗ إِنَّمَا يَتَذَكَّرُ أُو۟لُوا۟ ٱلْأَلْبَٰبِ ﴿٩﴾

*பொருள்: இவர்களிடம் கேளும், அறிந்தோரும் அறியாதோரும் சம மாக முடியுமா? அறிவுடையவர்கள்தாம் நல்லுரைகளை ஏற்கின்றனர் (அஸ்ஸுமர்:9)*

www.uzairiahi.com

*திருக்ஃகுர்ஆனில் கல்வியாளர்களைக் கீழ்க்காணும் வசனத்தில் குறிப் பிட்டுள்ள வகையில் மேன்மைப்படுத்துகின்றது:*

يَرْفَعِ ٱللَّهُ ٱلَّذِينَ ءَامَنُوا۟ مِنكُمْ وَٱلَّذِينَ أُوتُوا۟ ٱلْعِلْمَ دَرَجَـٰتٍ ﴿١١﴾ المجادلـ 1 )

*பொருள்: உங்களில் எவர் இறை நம்பிக்கை கொண்டிருக்கின்றீர் களோ மற்றும் எவர்களுக்கு ஞானம் வழங்கப்பட்டிருக்கின்றதோ அவர்களுக்கு அல்லாஹ் உயர்ந்த பதவிகளை வழங்குவான் (அல் முஜாதலஹ்:11)*

*இறைத்தூதர் ﷺ அவர்கள் கல்வி கற்பதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகளின் சிறப்புக்களைக் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றார் கள்:*

**مَنْ سَلَكَ طَرِيْقاً يَلْتَمِسُ فِيْهِ عِلْماً سَهَّلَ اللهُ لَهُ طَرِيْقاً إِلَى الْجَنَّةِ** البخاري،أبو داؤد،الترمذي، ابن ماجہ )

*பொருள்: எவர் ஒருவர் கல்வி கற்பதற்காக ஒரு வழியில் பயணத்தை மேற்கொள்கின்றாறோ, அதனுடைய சிறப்பின்காரணமாக, அல்லாஹ் தஆலா சுவர்க்கத்திற்கான பாதையை அவருக்காக எளிதாக்கித் தருகின் றான்* (புக்ஹாரி, அபூ தாவூத், திர்மிதி, இப்னு மாஜா).

*இறைத்தூதர் ﷺ அவர்கள் மேலும் கூறுகிறார்கள்:*

**طَلَبُ الْعِلْمِ فَرِيْضَةٌ عَلَى كُلِّ مُسْلِمٍ** ابن ماجہ )

*பொருள்: கல்வி கற்பது ஒவ்வொரு முஸ்லிம் மீதும் கடமையாகும் (இப்னு மாஜா)*

## 3 இஸ்லாமியக் கலாச்சாராத்தின் சிறப்பம்சங்கள் மற்றும் பிரதிபலிப்புகள்

*இஸ்லாமியக் காலாச்சாரம் மனிதர்களுடைய வாழ்க்கையின் ஆன்ம ரீதியான மற்றும் உலக வாழ்க்கையின் பண்புகளின் விஷயத்தில் கவனக்குறைவாக இருக்கவில்லை. ஆகவேதான், அனைத்துத் துறை களிலும் இஸ்லாமியக் காலாச்சாரக் கோட்பாடுகளின் பங்கு மிகவும்*

www.uzairfalahi.com

அதிகமாகவே இருப்பதைக் காணமுடிகிறது. இதன் அடிப்படையில் தான் இஸ்லாமியக் காலாச்சாரம் மனிதர்களுடைய வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டினை பிரதி பலிக்கச்செய்துள்ளது, அவற்றுள் சில கீழ்வருமாறு:

1 **அரசியல் துறை**

2 **வாழ்வாதாரம்**

3 **சமூகச் சீரமைப்பு**

4 **கல்வித்துறை**

5 **பன்னாட்டு உறவு**

6 **அரசியல் சாசன அமைப்பு**

7 **நீதித்துறை**

8 **போர்**

9 **கட்டிடக் கட்டமைப்பு**

* * *

www.uzairfalahi.com